# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி. 638 401
## சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்.
## தொலைபேசி எண்: 04295 – 243289, 243366

**பசலி 1432 பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமானதும் பாத்தியப்பட்டதுமான கீழ்க்கண்ட உரிம இனங்களை பசலி 1432க்கு ( 01.07.2022 முதல் 30.06.2023 வரை ) நடத்திக்கொள்ள கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வருகிற **13.05.2022ம்** தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அன்றே பிற்பகல் 3.00 மணிக்கு இத்திருக்கோயில் மண்டபத்தில் இலாகா அலுவலர்கள், பரம்பரை அறங்காவலர்கள் முன்னிலையில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடத்தப்படும். அந்தந்த இனத்திற்கு உயர்ந்த பட்ச கேள்வியில் ஏலம் நிறுத்தப்பட்டு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும். ஏலம் / ஒப்பந்தப்புள்ளி இவற்றில் எது அதிகமோ, அந்தத் தொகைக்கு ஆணையரது இரத்தாணைக்குட்பட்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்படும். இந்த உரிம இனம் 1959 – ஆம் ஆண்டு சென்னை இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டு நடத்தப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் வருகிற **12.05.2022 மற்றும் 13.05.2022** தேதி பிற்பகல் 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**உரிம இனங்கள் விவரம்.**

| வ. எண் | உரிம இனங்கள் விபரம் | உரிம காலம் பசலி 1432 ( 01.07.2022– 30.06.2023) | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை ரூ. (வரைவோலை) | காப்புத் தொகை ரூ. ரொக்கம். |
|---|---|---|---|---|
| 1. | பக்தர்களால் துலாபாரத்தில் எடைக்கு எடை செலுத்தும் காணிக்கை மற்றும் பக்தர்கள் நேரடியாக திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தும் காணிக்கை பொருட்களில் மளிகை பொருட்கள், காய்கறிகள், பழங்கள், மற்றும் நவதானிய பொருட்கள் மட்டும் சேகரம் செய்து கொள்ளும் உரிமம். | வருட உரிமம். | 2,00,000/- | 25,000/- |
| 2. | திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களால் திருக்கோயில் இடத்தில் உடைக்கப்படும் சிதறு தேங்காய்களை சேகரம் செய்து எடுத்துக் கொள்ளும் உரிமம். (திருவிழா காலம் நீங்கலாக) | வருட உரிமம். (திருவிழா காலம் நீங்கலாக) | 50,000/- | 5,000/- |
| 3. | ஆன்மீக நூல்கள் மற்றும் பக்திப்பாடல்கள் ஒலி நாடாக்கள் வைத்து விற்பனை செய்து கொள்ளும் உரிமம். (ஒரே இடம் ) | வருட உரிமம். | 50,000/- | 5,000/- |
| 4. | ஐஸ் விற்பனை செய்து கொள்ளும் உரிமம். | வருட உரிமம். | 1,00,000/- | 10,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களால் காணிக்கையாக விடப்படும் ஆடுகளை சேகரம் செய்து எடுத்துக் கொள்ளும் உரிமம். | வருட உரிமம். | 50,000/- | 5,000/- |
| 6 | இளநீர் வைத்து விற்பனை செய்து கொள்ளும் உரிமம். (ஒரே இடம்) | வருட உரிமம். | 20,000/- | 10,000/- |
| 7. | திருக்கோயில் தெப்பக்குளம் பகுதியில் பக்தர்களால் பலியிடப்படும் ஆடுகளின் தோல்களை சேகரம் செய்து கொள்ளும் உரிமம். | வருட உரிமம். | 50,000/- | 5,000/- |
| 8. | திருக்குண்டத்தில் சூரைவிடப்படும் கோழிகள், பறவை, தானியப் பொருட்கள் சேகரம் செய்து எடுத்துக் கொள்ளும் உரிமம். | வருட உரிமம். (திருவிழா காலம் நீங்கலாக) | 20,000/- | 1,000/- |
| 9. | தரைவிரிக்கடைகள் அமைத்து மோர், எருக்கு மர பொம்மைகள் மற்றும் பருவகால காய்கனிகள் வைத்து விற்பனை செய்து கொள்ளும் உரிமம். | வருட உரிமம். (திருவிழா காலம் நீங்கலாக) | 20,000/- | 5,000/- |
| 10. | நானாவிதக் கடை எண் 1 முதல் 25,27,28,29ல் ஆகிய நானாவிதக் கடைகளில் பேன்சி பொருட்கள் வைத்து விற்பனை செய்து கொள்ளும் உரிமம், நானாவிதக் கடை எண் 26ல் சமையல் பாத்திரங்கள், சாமியானா, டைனிங் டேபிள், சேர் வாடகைக்கு விடும் உரிமம் மற்றும் நானாவிதக் கடை எண் 30ல் மளிகைப் பொருட்கள் வைத்து விற்பனை செய்து கொள்ளும் உரிமம். (உரிம இனம் தனித்தனியாக) | வருட உரிமம். | 15,000/- (கடை ஒன்றுக்கு) | 5,000/- (கடை ஒன்றுக்கு) |
| 11. | ஒரு தென்னை மரம் 89 புளிய மரங்களின் மேற்பலன் உரிமம். | வருட உரிமம். | 500/- | – |

**இனம் – 1**

1. ஏல உரிமம் பெற்றவர்கள் திருக்கோயிலுக்கு காணிக்கை வழங்கும் பக்தர்களிடம் தனியே கட்டணம் ஏதும் வசூல் செய்யக் கூடாது.
2. மேற்படி உரிமத்திற்கென தனியே அறைகள் ஏதும் ஒதுக்கீடு செய்து தரப்படமாட்டாது. மேற்கண்ட காணிக்கை பொருட்களை உடனுக்குடன் அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.
3. பக்தர்கள் துலாபாரத்தில் எடைக்கு எடை செலுத்தும் காணிக்கை மற்றும் பக்தர்கள் நேரடியாக திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தும் காணிக்கை பொருட்களில் மளிகைப் பொருட்கள், காய்கறிகள் பழங்கள் மற்றும் நவதானியப் பொருட்கள் மட்டும் சேகரம்

செய்து எடுத்துக் கொள்ள வேண்டும். மேற்படி பொருட்களை தவிர திருக்கோயிலுக்கு வரும் ஏனைய பொருட்கள் அனைத்தும் திருக்கோயிலுக்குச் சாா்ந்ததாகும். மேற்படி பொருட்கள் சேகரம் தொடர்பாக வினா / சந்தேகம் / ஐயப்பாடு / பிரச்சனை ஏதும் எழுந்தால் நிர்வாகத்தின் முடிவிற்கு ஏலதாரா் கட்டுப்பட்டவராவார்.

4. திருக்கோயிலுக்கு பக்தர்களால் காணிக்கையாக கொடுக்கும், விலையுர்ந்த பொன், வெள்ளி இனங்கள், பரிவட்டங்கள், பித்தளை இனங்கள், தாமிர இனங்கள், எவர் சில்வர் இனங்கள், அலுமினிய இனங்கள், இண்டாலிய இனங்கள், மின் சாதனம், பிளம்பர் பொருட்கள், கட்டுமானப்பொருட்கள் மற்றும் பாத்திர வகைகள் உள்ளிட்ட இதர இனங்கள் அனைத்தும் திருக்கோயிலுக்குச் சொந்தமானதாகும்.

5. திருக்கோயிலுக்கு பக்தர்களால் காணிக்கையாக கொடுக்கும் தங்கம், வெள்ளி, வைரம், பிளாட்டினம் மற்றும் விலையுர்ந்த பொருட்கள் திருக்கோயிலுக்கு சொந்தமாகும். மேற்படி பொருட்களை உரிமை கொண்டாட ஏலதாரருக்கு உரிமை இல்லை.

6. பக்தர்கள் துலாபாரத்தில் எடைக்கு எடையாக செலுத்தும் நாணயங்கள், ரூபாய் நோட்டுக்கள் மற்றும் தங்கம் வெள்ளி நகைகள் அனைத்தும் திருக்கோயிலுக்குச் சேர்ந்ததாகும்.

7. பக்தர்கள் குண்டத்தில் செலுத்தும் பொருட்களை எடுக்கக்கூடாது.

8. ஒதுக்கப்பட்ட இடத்தினை தூய்மையாக பராமரிக்கப்பட வேண்டும்.

## இனம் – 2

1. சிதறு தேங்காய்களை சேகரம் செய்து எடுத்துக் கொள்ளும் உரிமையானது குண்டம் திருவிழா கம்பம் சாட்டிலிருந்து மறுபூசை மறுநாள் முடிய 15 நாட்கள் நீங்கலாக இதர நாட்களில் மட்டுமே அனுபவித்துக் கொள்ளலாம்.

2. சிதறு தேங்காய்கள் உடைக்கும் இடத்தை சுத்தமாகவும் பக்தர்களுக்கு இடையூறு இல்லாமலும் வைத்துக் கொள்ள வேண்டும்.

## இனம் – 3

1. ஏல உரிமதாரா் ஆன்மீக நூல்கள் மற்றும் பக்திப் பாடல்கள் கொண்ட ஒலி நாடாக்கள் மட்டும் தான் வைத்துக் கொண்டு வியாபாரம் செய்ய வேண்டும். இவைகளைத் தவிர வேறு எந்த விதமான நூல்களோ ஒலி நாடாக்களோ கடையில் வைத்து வியாபாரம் செய்யக் கூடாது. இவ்வாறு சட்டத்திற்கு புறம்பாகவும் , திருக்கோயில் ஏல நிபந்தனைகளுக்கு மாறாகவும் செயல்பட்டால் எவ்வித முன்னறிவிப்பின்றி ஏலம் உரிமம் ரத்து செய்யப்பட்டு அதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு ஏலதாரரே முழுப்பொறுப்பாக்கப்படுவர்.
2. ஏல உரிமதாரா், திருக்கோயிலின் மேற்குப் புற வாயிலின் வெளியே சருகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு செல்லும் பாதையின் வடக்குப்புறம் அம்மன் படம் விற்பனை கடையை ஒட்டி 10’ X 10’ அடி அளவில் தனது சொந்த செலவில் தற்காலிக தகர சீட்டிலான தீப்பிடிக்காத செட் அமைத்து கொண்டு கடையை நடத்திக் கொள்ளலாம்.
3. திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு இடையூறாகவும் , நிர்பந்தம் செய்தும் வியாபாரம் செய்யக் கூடாது.

4. ஏல உரிமதாரர் கடையில் ரேடியோ மற்றும் டேப் ரிக்கார்டர்களை திருக்கோயில் பூசை நேரங்களுக்கும், பக்தர்களுக்கும் இடையூறு ஏற்படா வண்ணம் குறைந்த ஒலியில் ஒலிபரப்பிக் கொள்ளலாம். இது குறித்து புகார்கள் ஏதும் வரப்பெறின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
5. ஏல உரிமதாரர் தான் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை நிர்வாகம் குறிப்பிடும் தொகைக்கு யூனிட் ஒன்றுக்கு கணக்கிட்டு அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.
6. ஏல உரிமதாரர் தமது கடையில் பிரேம் செய்யப்பட்ட (அ) பிரேம் செய்யப்படாத பண்ணாரி மாரியம்மன் திருவுருவப்படங்கள், கீ செயின், டாலர், ஸ்டிக்கர் போன்றவற்றை விற்பனை செய்யக் கூடாது.
7. ஒவ்வொரு மாதமும் இத்திருக்கோயிலுக்கு வரப்பெறும் திருக்கோயில் மாத இதழ் புத்தகங்களை அவ்வப்போது விற்பனை செய்து அம்மாத இறுதியில் விற்பனை தொகையை மொத்தமாக இத்திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்த வேண்டும். இதற்கென தனியாக ஆதாயத் தொகை ஏதும் வழங்கப்படமாட்டாது.
8. திருக்கோயில் மூலம் விற்பனை செய்யப்படும் எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்ய அனுமதி கிடையாது.
9. மேற்படி உரிமம் பெற்றவர் தமது சொந்தச் செலவில் தீயணைப்பான் கருவி மற்றும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் செலவில் கடைகளில் பொறுத்தப்படவேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை உபயோகப்படுத்தக் கூடாது.

**இனம் – 4**

1. திருக்கோயில் நிர்வாகம் குறிப்பிடும் இடத்தில் மட்டும் விற்பனை செய்ய வேண்டும். இரண்டு வண்டிகள் மட்டும் அனுமதிக்கப்படும்.
2. பக்தர்களை நிர்பந்தம் செய்து விற்பனை செய்யக் கூடாது.
3. திருக்கோயில் மூலம் விற்பனை செய்யப்படும் எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்ய அனுமதி கிடையாது.
4. மேற்படி உரிமம் பெற்றவர் தமது சொந்தச் செலவில் தீயணைப்பான் கருவி மற்றும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் செலவில் கடைகளில் பொறுத்தப்படவேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை உபயோகப்படுத்தக் கூடாது.

**இனம் – 5**

1. பக்தர்களால் காணிக்கையாக விடப்படும் ஆடுகளை உடனுக்குடன் தனது சொந்த பொறுப்பில் திருக்கோயில் எல்லையை விட்டு அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கென தனி நபர்களை நியமனம் செய்து கொள்ள வேண்டும்.
2. இவ்வுரிமத்திற்கென பக்தர்களிடமிருந்து எவ்வித கட்டணமும் வசூலிக்கக்கூடாது. பக்தர்களை நிர்பந்தம் செய்யக் கூடாது. கட்டணம் வசூல் செய்வதாக பக்தர்களிடம் புகார்கள் வரபெறுமாயின் எவ்வித முன்னறிவிப்பின்றி மேற்படி உரிமம் ரத்து செய்வதுடன் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## இனம் – 6

1. இந்த உரிமத்தினை எக்காரணம் கொண்டும் உள்குத்தகைக்கு விடக்கூடாது.
2. திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களை நிர்பந்தம் செய்யக்கூடாது. மேலும் திருக்கோயிலின் மேற்குப்புறம் நுழைவு வாயிலுக்கு வெளியே சருகுமாரியம்மன் திருக்கோயில் செல்லும் பாதையின் வடக்கே தேங்காய்பழக்கடையை ஒட்டி மேற்குப்புறம் பவானிசாகர் செல்லும் சாலையை ஒட்டி திருக்கோயில் இடத்தில் 10' X 10' அடி அளவில் கடை வைத்து நடத்திக் கொள்ளலாம்.
3. திருக்கோயிலுக்கு அருகில் செல்லும் நெடுஞ்சாலையில் இளநீர் வியாபாரம் செய்யும் வெளி நபர்களை தன் சொந்தப் பொறுப்பிலேயே ஏலம் எடுத்தவர் அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும். இளநீர் மட்டைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தப்படவேண்டும். தவறினால் அபராதம் விதிக்கப்படும்.
4. இளநீர் மட்டைகளை அப்புறப்படுத்த தவறினால் திருக்கோயில் மூலம் அப்புறப்படுத்தப்பட்டு அதற்கு ஆகும் செலவினம் காப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.
5. இளநீர் விற்பனைக்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் விற்பனை செய்ய வேண்டும்.
6. திருக்கோயில் மூலம் விற்பனை செய்யப்படும் எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்ய அனுமதி கிடையாது.
7. மேற்படி உரிமம் பெற்றவர் தமது சொந்தச் செலவில் தீயணைப்பான் கருவி மற்றும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் செலவில் கடைகளில் பொறுத்தப்படவேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை உபயோகப்படுத்தக் கூடாது.

## இனம் – 7

1. பக்தர்களின் ஆட்டுத்தோல் சேகரிக்கும் உரிமம் பெற்றவர் பக்தர்கள் விரும்பிக் கொடுக்கும் ஆட்டுத்தோல் மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்கென பக்தர்களிடமிருந்து எவ்வித கட்டணமும் வசூல் செய்யக்கூடாது. அவ்வாறு கட்டணம் வசூல் செய்ததாக திருக்கோயில் நிர்வாகத்திற்கு புகார்கள் வரப்பெறுமாயின் எவ்வித முன்னறிவிப்பின்றி மேற்படி உரிமம் ரத்து செய்யப்படும். இது குறித்தான அறிவிப்பு பலகைகள் தெப்பக்குளம் பகுதியில் பக்தர்கள் பார்வையில் படும்படி ஏலதாரர் தனது சொந்த பொறுப்பில் எழுதி வைக்கப்பட வேண்டும்.
2. ஆட்டுத்தோல் சேகரிக்கும் உரிமம் பெற்றவர் சேகரிக்கும் ஆட்டுத் தோல்களை உடனுக்குடன் திருக்கோயில் எல்லையை விட்டு அப்புறப்படுத்தி சுகாதாரக் கேடு ஏற்படா வண்ணம் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். சுகாதாரக்கோடு ஏற்படுத்தினால் அபராதம் விதிக்கப்படும். அபராதம் கட்டத் தவறினால் காப்புக் கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படும். இதற்கென தனி இடம் ஏதும் வழங்கப்படமாட்டாது.

## இனம் – 8

1. திருக்கோயில் குண்டத்தில் சூரைவிடும்கோழிகள், பறவைகள், தானியம் மற்றும் இதர பொருட்களை சேகரம் செய்து எடுத்துக் கொள்ளும் உரிமையானது திருவிழா கம்பம் சாட்டிற்கு அடுத்து வரும் சனிக்கிழமையிலிருந்து மறுபூசை மறுநாள் முடிய 11 நாட்கள் நீங்கலாக இதர நாட்கள் மட்டுமே ஆகும்.
2. குண்டத்தில் சாக்குப் போட்டு காசுகள், பணம் வகையறாக்கள் கண்டிபாக வசூல் செய்யக் கூடாது. மீறினால் ஏல உரிமம் ரத்து செய்யப்படும்.

**இனம் – 9**

1. திருக்கோயில் நிர்வாகம் குறிப்பிடும் இடத்தில் எருக்கு மரத்தாலான பொம்மைக் கடையையும், மோர் மற்றும் பருவகால காய்கனிக் கடையும் தரைவிரிக் கடைகள் அமைக்கலாம்.
2. தெப்பக்குளம் சாலை தெற்குப்புறம் பள்ளிக்கூடம் பின்புறம் தரைவிரிக் கடை **3' X 3'** அடி அளவிலும் திருக்கோயில் கிழக்குப்புற நுழைவு வாயில் அருகிலுள்ள புளியமரத்தின் கீழ் **3' X 3'** அடி அளவிலும் ( இரண்டு இடங்களில் மட்டும் ) டேபிள் வைத்து கடை வைக்கலாம். மற்ற இடங்களில் வைக்க அனுமதியில்லை. இதற்காக எந்தவிதமான மேடையோ, தடுப்போ அல்லது நிழலுக்கான மேற்கூரையோ அமைக்க அனுமதியில்லை. மோர் விற்பனைக்காக ஒரு மண் பானை அல்லது ஒரு பாத்திரத்தை மட்டுமே பயன்படுத்திக் கொள்ளலாம்.
3. திருக்கோயில் மூலம் விற்பனை செய்யப்படும் எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்ய அனுமதி கிடையாது.
4. மேற்படி உரிமம் பெற்றவர் தமது சொந்தச் செலவில் தீயணைப்பான் கருவி மற்றும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் செலவில் கடைகளில் பொறுத்தப்படவேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை உபயோகப்படுத்தக் கூடாது.
5. பொருட்களை தூக்கிச் சென்றோ, கூவியோ அல்லது வற்புறத்தியோ விற்பனை செய்யக்கூடாது. தரைவிரிக் கடைகளால் பக்தர்கள், பாதசாரிகள் மற்றும் வாகனங்களுக்கு எவ்விதத்திலும் இடையூறு ஏற்படுத்தக்கூடாது.
6. தரைவிரிக் கடைகள் பகல் நேரங்களில் மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதி உண்டு. இரவு நேரங்களில் கடைகளை தினசரி அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.
7. விற்பனை செய்யப்படும் மோர் மற்றும் பருவகால காய்கனி வகைகள் தரமானதாகவும், சுகாதாரமானதாகவும் இருக்க வேண்டும். ஏதேனும் குறைபாடுகள் நிகழ்வின் ஏலதாரரே முழுப் பொறுப்பாக்கப்படுவார்.
8. கூட்டம் அதிகமாகவுள்ள நாட்கள் மற்றும் சாதாரண நாட்களில் மேற்படி பொருட்களை வெளி நபர்கள் விற்பனை செய்ய நேரிட்டால் ஏலதாரர் தமது சொந்தப் பொறுப்பில் அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.
9. திருவிழா காலங்களான கம்பம் சாட்டு முதல் மறுபூசை மறு நாள் முடிய கடை வைத்து விற்பனை செய்ய அனுமதி இல்லை.
10. சத்தியமங்கலம் மைசூர் நெடுஞ்சாலையில் திருக்கோயிலுக்கு பின்புறம் தரைவிரிக்கடை மற்றும் தள்ளுவண்டியில் வியாபாரம் செய்யும் வெளி நபர்களை தன் சொந்தப் பொறுப்பிலேயே ஏலம் எடுத்தவர் அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**இனம் – 10**

1. நானாவிதக் கடைகள் சம்பந்தப்பட்ட கடைக் கட்டிடத்திலேயே வைக்கப்பட வேண்டும். கடையின் முன்பகுதியில் பொருட்களை தொங்க வைத்து பாதையில் செல்லும் பக்தர்களுக்கும், வாகனங்களுக்கும் இடையூறு செய்தல் கூடாது. மீறினால் திருக்கோயில் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நானாவிதக்கடை எண் **30**ல் மட்டும் மளிகை பொருட்களை வைத்து விற்பனை செய்து கொள்ளலாம். தேங்காய் பழக்கடை மற்றும் பிரசாதக்கடையில் விற்பனை செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்யக்கூடாது.

2. அரசு உத்தரவின்படி பீடி, சிகரெட், புகையிலை மற்றும் போதை தரும் பாக்குகள், பாலித்தீன் பைகளில் நிரப்பப்பட்ட தண்ணீர் பாக்கெட் விற்பனை செய்யக் கூடாது.

3. ஏல உரிமதாரர் தன் சொந்தப் பொறுப்பில் மின்சார வேலைகளை செய்து கொள்ள வேண்டும். மின் உரிமம் திருக்கோயிலின் பெயரில்தான் இருக்க வேண்டும்.

4. தென்னங்கீற்றினால் ஆன கூரைகள் போடக்கூடாது. தீப்பற்றாத தகர செட்டினால் மட்டும் போட வேண்டும். அவ்வாறு மீறினால் ஏலம் ரத்து செய்யப்படுவதுடன் அதனால் திருக்கோயிலுக்கு ஏற்படும் இழப்புக்கு ஏலதாரரே பொறுப்பாவார்.

5. நானாவிதக்கடைகளில் பிரேம் செய்யப்பட்ட ( அல்லது ) பிரேம் செய்யப்படாத பண்ணாரி மாரியம்மன் திருவுருவப்படங்கள், கீ செயின், டாலர், ஸ்டிக்கர் உள்ளிட்ட எந்தவொரு வடிவத்திலும் விற்பனை செய்யக் கூடாது.

6. நானாவிதக்கடைகளில் நெய்தீபம், நல்லெண்ணெய் மற்றும் நெய் விற்பனை செய்யக் கூடாது. பொரிகடலை வைத்து விற்பனை செய்யக்கூடாது.

7. நானாவிதக் கடைகள் 1 முதல் 25, 27, 28, மற்றும் 29 முடியவுள்ள கடை கட்டிடத்தில் பேன்ஸி பொருட்கள் மட்டுமே வைத்து விற்பனை செய்யப்பட வேண்டும்.

8. நானாவிதக் கடை எண் 26ல் சமையல் பாத்திரங்கள், டேபிள், சேர், சாமியானா, கேஸ் அடுப்பு ஆகியவற்றை வைத்து வாடகைக்கு விடலாம்.

9. திருக்கோயில் மூலம் விற்பனை செய்யப்படும் எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்ய அனுமதி கிடையாது.

10. மேற்படி உரிமம் பெற்றவர் தமது சொந்தச் செலவில் தீயணைப்பான் கருவி மற்றும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் செலவில் கடைகளில் பொறுத்தப்படவேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை உபயோகப்படுத்தக் கூடாது.

## இனம் – 11

1. தென்னை மரத்தின் மேற்பலன் உரிமை பெற்றவர் தென்னை மரத்தின் மேற்பலனை மட்டுமே அனுபவித்துக் கொள்ள வேண்டும். மரத்தையோ, பச்சை மட்டைகளையோ வெட்டுவது கூடாது.

2. குத்தகைக் கால முடிவில் உள்ள இளநீரையோ , குறும்பைகளையோ எடுக்காமல் மரத்தில் விட்டுச் செல்ல வேண்டும்.

3. புளியமரம் மேல் மகசூல் மட்டுமே அனுபவித்துக் கொள்ள வேண்டும். மரங்களுக்கு சேதம் ஏதும் விளைவிக்கக்கூடாது.

## பொது நிபந்தனைகள்

1. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைப்படி வைப்பு தொகைகள் யாவும் **Deputy Commissioner / Executive Officer, Arulmigu Bannari Mariamman Thirukoil, Bannari** என்ற பெயரில் வங்கியின் மூலம் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை, வங்கி வரைவோலை, சேமிப்பு முறி, வங்கி உத்திரவாதம் இவற்றில் ஏதேனும் ஒன்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ராஜன்நகர் – 1023 கிளையில் செல்லத்தக்க வகையில் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் வைப்புத் தொகை ரொக்கமாக பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கலந்து கொள்பவர்கள் வருமானவரி நிரந்தர கணக்கு எண். ( PAN Card ) மற்றும் GST எண் உள்ளவர்கள் மட்டும் தான் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

3. உயர்ந்த கேள்விதாரர் தான் கோரிய ஏலத்தொகை முழுவதும் ஏலம் முடிந்தவுடன் அன்றே செலுத்தி விட வேண்டும். அவ்வாறு செலுத்த தவறினால் வைப்புத் தொகை பறிமுதல் செய்வதோடு உயர்ந்த கேள்வி கேட்ட ஏல உரிமைதாரரால் திருக்கோயிலுக்கு ஏற்படும் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஏலத்தை ரத்து செய்து விட்டு மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி நடத்தப்படும். அவ்வாறு மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி நடத்தினால் அப்போது மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி தொகையில் குறைவு ஏற்பட்டால் அதனால் ஏற்படும் இழப்புக்கு சம்பந்தப்பட்ட உயர்ந்த கேள்விதாரரை பொறுப்பாக்கி எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலருக்கு பூர்ண உரிமையுண்டு. மேலும் எந்த ஒரு ஏலத்திலும் அன்னார் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். திருக்கோயிலுக்கு ஏற்படும் இழப்பிற்கு தொகை செலுத்தத் தவறிய உயர்ந்த கேள்விதாரரே முழுப் பொறுப்பாக்கப்படுவார்.

4. உயர்ந்த கேள்விதாரர் அந்தந்த இனத்திற்குரிய காப்புத் தொகையை ரொக்கமாக செலுத்த வேண்டும். ஏல நிபந்தனைகளை மீறினால் காப்புத் தொகை திருக்கோயிலுக்கு ஆதாயமாக்கப்படும். இந்த காப்புத் தொகை பசலி முடிந்த பின்னர் தான் திருப்பித் தரப்படும். இதற்கு (காப்புத்தொகை) வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

5. ஏலம் இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டு நடத்தப்படும். அதன்படி ஏலம் அறநிலையத்துறை ஆணையரது மறுபாணைக்குட்பட்டு உறுதி செய்யப்படும்.
6. ஏல சம்பந்தமாக ஏற்படும் எல்லாவிதமான ஐயப்பாடுகளுக்கும் திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலர் முடிவே இறுதியானதும் கட்டுப்பட்டதுமாகும்.
7. திருக்கோயிலுக்கு எந்த வகையிலும் பாக்கிதாரர்களோ, திருக்கோயில் நிர்வாகத்திற்கு இடையூறு செய்தவர்களோ, திருக்கோயில் நலனுக்கு விரோதமாக செயல்பட்டவர்களோ, திருக்கோயிலுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவர்களோ ஏலத்தில் கண்டிப்பாக கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.
8. விளக்குகள் திரி விற்பனை செய்யக் கூடாது. நெய் எண்ணெய் பாக்கெட், சூடம் மற்றும் சாம்பிராணி நெய் பாக்கெட் விற்பனை செய்யக் கூடாது.
9. ஏலத்தின் போது எந்த ஒரு இனத்திற்கும் திருக்கோயில் ஆரம்பக் கேள்வி சந்தர்ப்பம் போல நிர்ணயம் செய்யப்படும். யாதொரு காரணம் கூறாமல் ஏலம் ஒத்தி வைக்கவும், மீண்டும் குறிப்பிட்ட தேதியில் நடத்தவும், மறு ஏலம் விடவும் திருக்கோயில் நிர்வாகிகளுக்கு பூர்ண உரிமையுண்டு.
10. உரிமதாரர் தானக முன்வந்து உரிமத்தினை ஒப்படைப்பு செய்ய நேர்ந்தால் ஒப்பந்தப்புள்ளித் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது. மேலும் மறு ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படும். மறு ஏலத்தில் நஷ்டம் ஏற்பட்டால் உரிமதாரரே இதற்கு பொறுப்பாவார்.
11. மின் கட்டணம் கடை உரிமைதாரர்களே தன் சொந்தப் பொறுப்பில் செலுத்திக் கொள்ள வேண்டும்.
12. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் செலுத்தியவர்கள் சம்மந்தப்பட்ட ஏல இனத்தை பார்வையிட்டும், ஏல நிபந்தனைகளை நன்கு அறிந்தும், ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்களாக கருதப்படுவார். ஏலம் முடிவு செய்தபின் கூறப்படும் எவ்வித ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
13. உரிம இனங்களுக்கு வருமானவரி நடைமுறை விதிகளின்படி 2% மற்றும் GST 18% ( CGST 9%, SGST 9%) ஏலத்தொகையினை கணக்கிட்டு திருக்கோயிலில் செலுத்த வேண்டும்.

14. ஏலத்திற்கு முன்னரோ / பின்னரோ, ஏல உரிமகாலத்தின் போதோ எந்த நேரத்திலும் ஏல நிபந்தனைகளைக் கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ, திருத்தவோ, ஏலத்தைத் தள்ளி வைக்கவோ, ஏலத்தை நிறுத்தவோ, ஏலக் கேள்வியினை நிராகரிக்கவோ, திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களுக்கு பூர்ண உரிமையுண்டு.
15. ஏல உரிமைக்காலம் முடிந்தவுடன் 30.06.2022 அன்று ஏல உரிமையை எவ்வித சேதமும் இல்லாமல் காலி செய்து திருக்கோயில் வசம் ஒப்படைக்க வேண்டும். மேலும் ஏல உரிமைக் காலம் முடிந்ததும் சொத்து கோயிலுக்கு தாமாகவே சுவாதீனம் வந்ததாகக் கருதப்படும். இதில் ஏதேனும் திருக்கோயிலுக்கு இழப்பு நேரிட்டால் இதற்கு உரிமைதாரரே முழுப்பொறுப்பாவார்.
16. ஏல உரிமையை எக்காரணம் கொண்டும் உள்குத்தகைக்கு விடவோ, பினாமியில் நடத்தவோ உரிமை கிடையாது. மேலும் தன் விருப்பப்படி உரிமத்திலிருந்து விடுபடவும் உரிமையில்லை.
17. போட்டி காரணமாக அதிகத் தொகை கேட்டு அதனால் பொருட்களை அதிக விலைக்கு விற்பதோ, நிர்பந்தம் செய்வதோ கூடாது. அவ்வாறு விற்பனை செய்து வருகின்ற பொது மக்களும், பக்தர்களுக்கும் இடையூறு ஏற்பட்டு புகார்கள் ஏதும் வருமானால் அப்போது உரிமைதாரர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு பூரண உரிமை உண்டு.
18. உரிமம் பெற்றவர்கள் இந்து சமயத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.
19. ஏலதாரர்கள் தங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்ட இடத்தில் வைத்து வியாபாரம் செய்யும் பொருட்களுக்கு அவரவர்களது சொந்தப் பொறுப்பில் தீ விபத்து மற்றும் இயற்கை உபாதைகளுக்கான இன்சூரன்ஸ் எடுக்க வேண்டும். அவ்வாறு இன்சூரன்ஸ் செய்யாதபட்சத்தில் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பாகாது. மேலும் திருக்கோயில் நிர்வாகத்திடமிருந்து நஷ்ட ஈடு கோரமாட்டோம் என்று குத்தகைப் பத்திரத்தில் எழுதிக் கொடுக்க வேண்டும். மேலும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் சொந்த செலவில் கடைகளில் பொறுத்தப்பட வேண்டும்.
20. ராஜீகம், தெய்வீகம், நீர், நெருப்பு, காற்று போன்ற இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் இழப்புகளுக்கும், அசாதாரண விபத்துகளுக்கும் மற்றும் அசம்பாவித சம்பவங்களால் ஏற்படும் இழப்புகளுக்கும், விபத்துகளுக்குத் திருக்கோயில் நிர்வாகம் எந்த வகையிலும் பொறுப்பு ஏற்காது சம்பந்தப்பட்ட ஏலம் / ஒப்பந்தப்புள்ளிதாரரே பொறுப்பு ஏற்க வேண்டும். தமது சொந்த செலவினில் காப்பீடு செய்து இழப்பீடு வழங்க ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
21. ஒவ்வொரு ஏல இனமும் ஏலம் முடிந்த பின்னர் அந்த இனத்திற்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் துறை அதிகாரிகள் முன்னிலையில் திறக்கப்பட்டு எது அதிகமோ, அது உறுதி செய்யப்படும். அதாவது ஏலத்தொகையினை விட ஒப்பந்தப்புள்ளித்தொகை அதிகமாக இருந்தால் ஏலத்தொகை நிராகரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளித் தொகை ஏற்றுக் கொள்ளப்படும். ஏலத்தொகையை விட ஒப்பந்தப்புள்ளித் தொகை குறைவாக இருந்தால், ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு ஏலத் தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆணையர் ரத்து அங்கீகாரத்திற்குட்பட்டு பதிவு செய்யப்படும்.

22. திருக்கோயில் நலன் கருதியும், பக்தர்கள் நலன் கருதியும், உரிமம் பெற்றவர்களுக்கு தற்போது ஏலட் விட்ட இடத்திற்கு பதிலாக வேறு மாற்று இடம் கொடுக்க நிர்வாகத்திற்கு பூர்ண உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க உரிமம் பெற்றவர்களுக்கோ அல்லது வேறு யாருக்கோ உரிமம் கிடையாது.

23. திருக்கோயில் நலன் கருதி கட்டிடங்களில் மாறுதல் அபிவிருத்தி பணிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் உரிமம் காலத்தில் ரத்து செய்து கட்டிடத்தை திரும்ப எடுத்துக் கொள்ள திருக்கோயிலுக்கு அதிகாரம் உண்டு. இதில் உரிமதாரர் ஏதும் நஷ்ட ஈடு கோர உரிமை இல்லை.

24. மது அருந்தியவர்களோ அல்லது லாகிரி வஸ்துக்களை அருந்தியவர்களோ இந்த ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

25. திருக்கோயில் அலுவலகத்தில் வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை மட்டுமே பயன்படுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.

26. திருக்கோயில் ஊழியர்களோ, ஊழியர்களுக்கு உறவினர்களோ ஏலத்தில் கண்டிப்பாக கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது. பினாமி பெயரில் எவரும் ஏலம் எடுக்கக்கூடாது.

27. ஏலத்தில் கேள்வித் தொகை இனம் 1 – 10 வரை ரூ. 500 /- க்கும் 11 வரை 100/-க்கும் குறைவாக கேட்க அனுமதிக்க இயலாது.

28. ஏலம் எடுத்த உரிமைதாரர்கள் கடைகளில் ரேடியோ மற்றும் டேப் ரிக்கார்டுகளை வைத்து பக்தர்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் ஒலிபரப்பிக் கொள்ள வேண்டும். இது குறித்து புகார்கள் ஏதும் வரப்பெறின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

29. ஏல நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையை மீறினாலும் முன்னறிவிப்பின்றி ஏல உரிமம் ரத்து செய்யப்படும்.

30. திருக்கோயில் நலன் கருதியும், பக்தர்களின் நலன் கருதியும், உரிமம் பெற்றவர்களுக்கு ஏலம் விட்ட இடத்திற்கு பதிலாக வேறு மாற்று இடம் கொடுக்க திருக்கோயில் நிர்வாகத்தினருக்கு உரிமையுண்டு. இதை ஆட்சேபிக்க உரிமம் பெற்றவர்களுக்கோ, அல்லது வேறு யாருக்கும் உரிமை கிடையாது.

31. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உரிமம் பெற்றவர் 7 தினங்களுக்குள் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிந்தனைகளுக்குட்பட்டு ரூ. 50/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் குத்தகைப் பத்திரம் தனது சொந்த செலவில் எழுதிக் கொடுக்க வேண்டும். ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்காவிடில் சம்பந்தப்பட்ட உரிமம் அனுபவிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். தேவையெனில் தமது சொந்த பொறுப்பில் ரிஜிஸ்டர் செய்து கொடுக்க வேண்டும்.

32. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் முழுவிபரங்களும், நிபந்தனைகளும், தெரிந்தே கலந்து கொண்டதாக கருதப்படுவார்கள். நடவடிக்கை முடிவு செய்த பின்பு கூறும் எவ்வித ஆலோசனைகளையும் ஆட்சேபனைகளையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

33. ஏலம் உரிமம் பெற்றவர்கள் திருக்கோயில் வளாகத்திற்குள் உள்ளே சுற்றுச்சுவர் ஒட்டியுள்ள இடத்தில் எந்த ஒரு கடையும் வைத்து விற்பனை செய்ய அனுமதி இல்லை.

34. உரிமம் இனங்களுக்கு விற்பனை வரி மற்றும் ஏதேனும் அரசு வரிகள் செலுத்த வேண்டியிருந்தால் உரிமைதாரர் தன் சொந்தப் பொறுப்பில் மேற்படி வரிகள் செலுத்திக் கொள்ள வேண்டும். மேற்படி வரிகள் சம்பந்தமாக இத்திருக்கோயிலுக்கு யாதொரு சம்பந்தமும் கிடையாது.

35. உரிமைதாரர் பசலியாண்டில் இறந்து போனால் வாரிசுகளோ அல்லது அட்மினிஸ்ட்ரேட்டர்களோ நிபந்தனைகளை நிறைவேற்ற கடமைப்பட்டவராவார். ஆனால் உரிமத்தினை நிர்வாகத்தினர் முடிவு செய்யும் பட்சத்தில் வாரிசுதாரர்கட்கு உரிமம் பாத்தியதை இல்லை. புதிய நடவடிக்கை மேற்கொண்டு வேறு நபருக்கு உறுதி செய்ய நிர்வாகத்தினருக்கு பூரண உரிமையுண்டு.

36. உரிமைதாரர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திருக்கோயில் கட்டிடங்களுக்கு திருக்கோயில் அனுமதியின்றி எவ்வித மாற்றங்களோ அல்லது மராமத்து வேலைகளோ செய்யக் கூடாது. மேற்படி கட்டிடங்களை உள்குத்தகைக்கோ அல்லது தினசரி வாடகைக்கோ விடக் கூடாது. மீறினால் ஏலம் ரத்து செய்யப்படும்.

37. ஏல உரிமதாரர்கள் அனைவரும் **பாலித்தின் மற்றும் பிளாஸ்டிக் கவர்களை** பயன்படுத்தக் கூடாது. **பாலித்தின் மற்றும் பிளாஸ்டிக் கவர்கள்** பயன்படுத்தப்பட்டால் அவற்றை பறிமுதல் செய்யவும் அபராதம் விதித்து காப்புத் தொகையில் பிடித்தம் செய்யவும், ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உரிமத்தை ரத்து செய்யவும், திருக்கோயில் நிர்வாகத்திற்கு பூரண அதிகாரம் உண்டு.

38. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை (விலை விவரம் போன்றவை) பொது மக்களுக்கு தெரியும் வகையில் ஒப்பந்ததாரர்கள் தேவையான அளவில் விளம்பரப் பலகைகள் திருக்கோயில் நிர்வாகம் குறிப்பிடும் எண்ணிக்கையில் எழுதி வைக்க வேண்டும். தவறினால் திருக்கோயில் மூலம் விளம்பரப் பலகை எழுதி வைக்கப்பட்டு அதற்கான செலவுகள் ஒப்பந்ததாரர்களது காப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

39. திருக்கோயில் மற்றும் பக்தர்களின் பாதுகாப்புக்கருதி தீயணைப்பான் கருவிகள் **( Fire Safety EQuipments)** தங்கள் சொந்தப் பொறுப்பில் வாங்கி பொறுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் சொந்த செலவில் கடைகளில் பொறுத்தப்பட வேண்டும். அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பட்டால் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.

40. மேற்படி உரிம இனத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி முடிந்து பலன் அடைந்தவர்கள் Income Tax office 1961ன் சட்டப்படி உரிய தொகை உடன் செலுத்த வேண்டும். மேலும் வருமானவரி நிலையான கணக்கு எண் ( Pan Certificate) தாக்கல் செய்ய வேண்டும்.

41. எதிர்வரும் காலங்களில் ஏற்படும் அரசின் கொள்கை முடிவுகளுக்கு ஏற்ப ஏல உரிமைதாரர்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

42. உணவுப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை தயார் செய்து விற்பனை செய்யும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உரிமைதாரர்கள் உணவு பாதுகாப்புத் துறையில் உணவு தரச் சான்று சொந்தப் பொறுப்பில் பெறப்பட வேண்டும்.

43. அரசு உத்தரவின்படி பீடி, சிகரெட், புகையிலை லாகிரி வஸ்துக்கள், பாலித்தீன் பைகளில் நிரப்பப்பட்ட தண்ணீர் பாக்கெட் விற்பனை செய்யக் கூடாது.

44. உரிமம் பெற்றவர்கள் “ தேவஸ்தான கடை ” என்று திருக்கோயில் பெயரை பயன்படுத்தி விளம்பரப் பலகை வைக்கக் கூடாது.

45. தயாரிப்புத் தேதி மற்றும் காலாவதி தேதி குறிப்பிடாத எந்த உணவு பொருட்களையும் விற்பனை செய்யக் கூடாது. காலாவதியான மாவு பொருட்களை கொண்டு உணவுப் பொருட்களை தயாரிக்கக் கூடாது. காலாவதியான குளிர்பானங்கள், குளிர்பானங்கள் தயாரிக்க சுகாதாரமற்ற முறையில் வைக்கப்பட்டிருக்கும் ஐஸ்கட்டிகளைப் பயன்படுத்தக் கூடாது.

46. இதர நிபந்தனைகள் ஏலத்தின் போது அறிவிக்கப்படும்.

இங்ஙனம்,

வீ. புருசோத்தமன்,
ராஜாமணி தங்கவேல்,
புஷ்பலதா கோதண்டராமன்,
வீ. மகேந்திரன்,
(பரம்பரை அறங்காவலர்கள்)

வே. சபர்மதி ,பி.எல்.,
துணை ஆணையர் / செயல் அலுவலர்
(முழுக்கூடுதல் பொறுப்பு)

இடம் : பண்ணாரி.
நாள் : 25.04.2022